# UNIVERSITY OF JAFFNA
# SRI LANKA

# Master of Tamil

(தமிழில் முதுமாணி)

**Syllabus**

FACULTY OF GRADUATE STUDIES

2022

# அறிமுகம்

உலகிலுள்ள தொன்மையான மொழிகளுள் தமிழும் ஒன்றாகும். நீண்ட இலக்கியப் பாரம்பரியமும் பிறமொழிகளின் செல்வாக்கிற்கு உட்படாமல் தனித்து நிற்கும் இலக்கணமும் தமிழ் செம்மொழியாக உயர்ந்து நிற்பதற்குக் காரணமாக உள்ளன. தமிழின் இலக்கிய இலக்கணப் பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டு அடுத்த தலைமுறையினருக்கு வழங்கப்படவேண்டும். தமிழ்மொழியின் அமைப்பு அது உலக மொழிகள் பலவற்றுடனும் கொண்டுள்ள பிணைப்பு என்பன ஆழமான மொழியியல் பின்புலத்தில் ஆய்வுசெய்யப்பட வேண்டும். அவ்வாறே தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்தும் சமூக பண்பாட்டு அம்சங்கள் தெளிவாக ஆராயப்பட்டு வரலாற்றுத் தொடர்ச்சியும் பண்பாட்டுச்சிறப்பும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டப்பட வேண்டும். தமிழ் என்பது ஒரு மொழி என்பதற்கு அப்பால் அது இலக்கியம், இலக்கணம், சமயம், சமூகவியல், மெய்யியல், அறிவியல் முதலான பண்பாட்டுக் கூறுகள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை கலைமாணிப் பட்டப்படிப்பின்போது கற்றுக்கொண்ட மாணவர்களுக்கு அதனை விரிவாக்கித் தமிழியலின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்துக்காட்டுவதாக இக்கற்கைநெறி அமையும்.

தமிழில் முதுமாணி என்ற கற்கைநெறியானது 2008 ஆம் ஆண்டு முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை ஏழு அணிகள் தமது கற்கைநெறியைப் பூர்த்தி செய்துள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை வளவாளர்களுடன் பேராதனைப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழக வளவாளர்களும் மரபுசார் பண்டிதர்களும் தமது அறிவைப் பரப்புகின்ற கற்கைநெறியாக இது விளங்கிவருகின்றது.

**நோக்கு:-** தமிழில் முதுமாணிப் பட்டதாரிகளை கற்றல் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியில் மகோன்னதமுடையவர்களாக மாற்றுதல்.

**இலக்கு:-** திறமை, திறன் தேர்ச்சிமிக்க தொழில்வாண்மையாளராக்குவதற்கான வசதிப்படுத்துனராக விளங்கி – தமிழ், பண்பாடு, கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சிகளுக்கு இடமளித்தல்.

## 1. பட்டதாரித் தகுதிக்கோவை (Graduate Profile)

தமிழில் முதுமாணிப்பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் தமிழிலுள்ள மரபுசார்ந்த இலக்கணத்தினைத் தெளிவாகக் கற்றுக்கொள்வதுடன் நவீன இலக்கணத்திற்கான தேவையினையும் தெரிந்துகொள்வர். இதன்மூலம் மொழியில் காலந்தோறும் ஏற்பட்டுவந்த மாற்றங்களையும் இவர்கள் அறிந்துகொள்வர்.

பழந்தமிழ் இலக்கியங்களையும், நவீனதமிழ் இலக்கணங்களையும் கற்பதால் பண்டைத் தமிழ்ச் சமூக வரலாற்றையும் அது பிற்காலங்களில் அடைந்த வளர்ச்சி நிலைகளையும் அறிந்துகொள்வதுடன் அவை தொடர்பான விமர்சனங்களை முன்வைக்கக்கூடிய ஆற்றலையும் பெற்றுக்கொள்வர்.

## 2. புலமைத்துவ மேம்பாடு (Academic Excellence)

- மரபுசார்ந்த தமிழ் இலக்கண இலக்கியங்களில் தெளிவான அறிவைப்பெறுவர்.
- நவீனதமிழ் இலக்கணத்திலும் நவீன இலக்கியங்களிலும் தெளிவான அறிவைப்பெறுவர்.
- காலமாற்றத்திற்கேற்ப இலக்கணத்திலும் இலக்கியப்போக்கிலும் ஏற்பட்டுவந்த மாற்றங்களை விமர்சிப்பர்.
- சமுதாய வளர்ச்சிப்போக்கினை இலக்கியங்களினூடாக அறிந்து விமர்சிப்பர்.
- காலந்தோறும் உருவாகிவந்த கருத்துநிலைகளுக்கேற்ப இலக்கியத்தின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் ஏற்பட்ட மாற்றங்களை விமர்சிப்பர்.
- தமிழை ஆங்கிலத்திலும் ஆங்கிலத்தைத் தமிழிலும் மொழிபெயர்க்கும் பயிற்சியைப் பெற்றுக்கொள்வர்.

## 3. தொழிலுக்கான தயார்நிலையும் வேலைவாய்ப்பும்.

தமிழில் முதுமாணிக் கற்கையினைப் பயில்கின்ற மாணவர்கள் ஆசிரியர்களாகவோ ஊடகவியலாளர்களாகவோ பணியாற்றுகின்றவர்களாக இருப்பதனால் இவர்கள் தமது தொழில்சார் திறமைகளை வளர்த்துக்கொள்ள இக்கற்கைநெறி உதவும்.

வேலைவாய்ப்புக்காகக் காத்திருப்பவர்களுக்கு தமிழில் சிறந்த தேர்ச்சியினை இக்கற்கைநெறி வழங்குவதால் இவர்கள் ஆசிரியர்களாகவோ, சிறந்த விமர்சகர்களாகவோ உருவாகுவதற்கான வாய்ப்பை இக்கற்கைநெறி வழங்கும்.

## 4. கற்கைநெறியின் நோக்குகள்

தமிழில் முதுகலைமாணிப்பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சியுடையவர்களாகவும், தன்னம்பிக்கையும் சுயசிந்தனையும் படைப்பாளுமையும் உடையவர்களாகவும் உருவாகுவதற்கு இப்பயில்துறை வழிவகுக்கும்.

தொழில்சார் திறமைகளை விருத்தி செய்வதற்கும், பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இக்கற்கைநெறி உதவும். அத்துடன் மொழிவிருத்தி மற்றும், படைப்புசார் பட்டறைகளில் பயிற்றுவிப்பளராக மிளிர்வதற்றும் வழிசமைக்கும்.

### 4.1. கற்றல்பேறு

- தமிழ்மொழியினதும் இலக்கியத்தினதும் தொன்மையினையும் வரலாற்றினையும் வரையறை செய்வர்.
- காலந்தோறும் மொழியில் ஏற்பட்டுவந்த மாற்றங்களையும் அதன் வளர்ச்சியினையும் திறனாய்வுபூர்வமாகக் கண்டுகொள்வர்.
- தமிழ்மொழியையும் இலக்கியத்தையும் பிறமொழிகளுடன் ஒப்பிட்டு ஆய்வுசெய்வர்.
- சுயமாகக் கட்டுரைகளை வடிவமைப்பர்.
- இலக்கிய உத்திகளை இனங்காண்பர்.
- இலக்கியத்தின்வழி தமிழ் மக்களின் சமூக பொருளாதார வரலாற்றை வியாக்கியானம் செய்வர்.
- தமிழ் இலக்கியங்கள் காட்டும் உயர்ந்த பண்பாட்டு விழுமியங்களைக் கண்டுகொள்வர்.
- இலக்கியத்தின் உருவ உள்ளடக்கநிலையில் ஏற்பட்டுவந்த மாற்றங்களையும் அதற்கான காரணங்களையும் தெரிந்துகொள்வர்.
- இலக்கியப் படைப்பாளிகளின் தனித்தன்மைகளை விபரிப்பர்.
- உலகத்தரம்வாய்ந்த இலக்கியங்களுடன் தமிழ் இலக்கியங்களை ஒப்பிடுவர்.

### 4.2. ஆக்கமுயற்சியும் திறனாய்ந்து கூறுதலுக்கான தகவமைப்பும்

- இக்கற்கைநெறியினைப் பூர்த்திசெய்த மாணவர்கள் சமூகத்திலுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வினை வழங்கக்கூடியவர்களாக இருப்பர்.
- தமிழில் சிறந்த கட்டுரைகளை எழுதக்கூடியவர்களாக இருப்பர்.
- படைப்பிலக்கியங்களை உருவாக்கக்கூடியவர்களாக இருப்பதுடன் அவற்றைத் திறனாய்வு செய்யும் ஆற்றலையும் பெற்றுக்கொள்வர்.

### 4.3. ஒழுக்க விழுமியங்கள் தொடர்பில் விழிப்புணர்வாகவும் சுயசிந்தனையுடனும் இருத்தல்

இக்கற்கைநெறியின் மூலம் ஒழுக்க விழுமியங்களின் உயர்வும், சுயசிந்தனைக்கான வழிவகைகளும் கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் சுயமான சிந்தனை உடையவர்களாகவும் ஒழுக்க விழுமியங்களை மதித்து நடக்கக்கூடியவர்களாகவும் அதனைப் பிறருக்கு எடுத்துக்கூறிச் சமுதாய நலனை மேம்படுத்தக்கூடியவர்களாகவும் உருவாக்கப்படுவர்.

## 5. தொடர்பாடல்

இம் மாணவர்கள் தமிழ்மொழியில் ஆற்றலைப் பெற்றிருப்பதாலும், இரண்டாம்மொழியில் பயிற்சிபெறுவதாலும் சமூகத் தொடர்பாடலை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலைப் பெற்றுக் கொண்டவர்களாக இருப்பர்.

## 6. நிகழ்ச்சித்திட்ட அமைப்பு

- இக்கற்கைநெறி இரண்டு பருவங்களை உள்ளடக்கிய ஓராண்டுக்காலக் கற்கைநெறியாகும்.
- ஓராண்டுக் காலத்தில் மாணவர்கள் பதினொரு பாட அலகுகளைக் கற்பதுடன் இரண்டாவது பருவத்தின் நிறைவில் ஆய்வேடு ஒன்றினையும் சமர்ப்பிக்கவேண்டும்.
- ஒவ்வொரு பருவத்திலும் கற்பிக்கப்படும் பாட அலகுகள் மூன்று கற்கைக்கால அளவுப் பெறுமதி உடையனவாக இருப்பின் (3 Credit) 45 மணித்தியால விரிவுரை/ கட்டுரை வகுப்புக்களைக் கொண்டதாகவும் இரண்டு கற்கைக்கால அளவுப்பெறுமதியைக் கொண்டவையாயின் முப்பது மணித்தியால விரிவுரைகள் / கட்டுரை

வகுப்புக்களை உடையதாகவும் அமையும். ஆய்வேடு ஆறு கற்கைக்கால அளவுப்பெறுமதி உடையதாக அமையும்.

- மொத்தமாக மாணவர்கள் இக்கற்கைநெறியில் 35 கற்கைக்கால அளவுப்பெறுமதியைப் பெற்றுக்கொள்வர். (35 Credit)

## 7. நிகழ்ச்சித்திட்ட அமைப்பு

- இக்கற்கைநெறி இரண்டு பருவங்களை உள்ளடக்கிய ஓராண்டுக்காலக் கற்கைநெறியாகும்.
- ஓராண்டுக் காலத்தில் மாணவர்கள் பதினொரு பாட அலகுகளைக் கற்பதுடன் இரண்டாவது பருவத்தின் நிறைவில் ஆய்வேடு ஒன்றினையும் சமர்ப்பிக்கவேண்டும்.
- ஒவ்வொரு பருவத்திலும் கற்பிக்கப்படும் பாட அலகுகள் மூன்று கற்கைக்கால அளவுப் பெறுமதி உடையனவாக இருப்பின் (3 Credit) 45 மணித்தியால விரிவுரை/ கட்டுரை வகுப்புக்களைக் கொண்டதாகவும் இரண்டு கற்கைக்கால அளவுப்பெறுமதியைக் கொண்டவையாயின் முப்பது மணித்தியால விரிவுரைகள் / கட்டுரை வகுப்புக்களை உடையதாகவும் அமையும். ஆய்வேடு ஆறு கற்கைக்கால அளவுப்பெறுமதி உடையதாக அமையும்.
- மொத்தமாக மாணவர்கள் இக்கற்கைநெறியில் 35 கற்கைக்கால அளவுப்பெறுமதியைப் பெற்றுக்கொள்வர். (35 Credit)

## 8. பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்

### 8.1. உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

பரீட்சை மதிப்பீடுகள் உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு 30% புள்ளிகளை வழங்குவதாக அமையும்

| | | |
|---|---|---|
| தனிப்பட்ட கட்டுரை | 10% | 30% |
| குழு ஒப்படை | 10% | |
| முன்னிலைப்படுத்தல் | 10% | |

**8.2. அரையாண்டுப் பரீட்சை 70%**

**100%**

அடுத்து 70% ஆன புள்ளிகள் அரையாண்டுப் பரீட்சையை மையமாகக் கொண்டு வழங்கப்படும்.

அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடானது மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாகவும் (3 அலகுகள் - 3 Credit), இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகவும் அமையும் (2 அலகுகள் - 2 Credit).

**3 Credit: -** எட்டு வினாக்களைக் கொண்டதாகும். எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**2 Credit: -** ஐந்து வினாக்களைக் கொண்டதாகும். எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

## 8.3

| ஆய்வு தொடர்பான மதிப்பீடு | |
|---|---|
| ஆய்வுத்திட்ட முன்மொழிவு<br>ஆய்வேடு – மதிப்பீடு<br>வாய்மொழிப் பரீட்சை | 15%<br>65%<br>20% |
| | 100% |

## 9. இறுதிப் பரீட்சைக்கான தகுதி

அரையாண்டின் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தாம் தோற்றவுள்ள பாடத்திற்குரிய உள்ளகக் கற்கைநெறிக்கான 30% மான புள்ளிகளில் 12% மான புள்ளிகளைப் பெற்றிருக்கவேண்டும் என்பதுடன், குறித்த பருவத்தில் நடைபெற்ற விரிவுரை/ கட்டுரை வகுப்புக்களில் 80% மானவற்றிற்குச் சமுகமளித்திருக்க வேண்டும்.

## 10. ஒட்டுமொத்த தரப்புள்ளிகளைக் கணித்தல் (OGP)

கலைப்பீடத்தின் நியமமாக 15 மணித்தியால விரிவுரைகளும், கட்டுரை வகுப்புக்களும் கொள்ளப்படுவதால் 15 மணித்தியாலம் ஒரு கற்கைக்கால அளவுப்பெறுமதியுடையதாகக் கொள்ளப்படும். ஒரு பருவத்தில் 45 மணித்தியால விரிவுரைகள்/ கட்டுரை வகுப்புக்கள் நடாத்தப்படுமாயின் அது 3 கற்கைக்கால அளவுப்பெறுமதி உடையதாகக் கொள்ளப்படும். 30

மணித்தியால வகுப்புக்களை உடைய பாடநெறி இரண்டு கற்கைக்கால அளவுப்பெறுமதி உடையதாகக் கொள்ளப்படும். ஆய்வேடு 06 கற்கைக்கால அளவுப்பெறுமதி உடையதாகும்.

**தரங்களைக் குறிக்கும் அளவுத்திட்டம்.**

மாணவர்களின் பெறுபேறுகள் அதிசிறப்புச் சித்தியிலிருந்து சித்தியின்மைவரை தரங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இதனைப் பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

| புள்ளிகளின் வீச்சு | தரம் | தரப்புள்ளிப் பெறுமதி |
|---|---|---|
| 80ம் மேலும் | A+ | 4.00 |
| 75 – 79 | A | 4.00 |
| 70 – 74 | A- | 3.70 |
| 65 – 69 | B+ | 3.30 |
| 60 – 64 | B | 3.00 |
| 55 – 59 | B- | 2.70 |
| 50 – 54 | C+ | 2.30 |
| 45 – 49 | C | 2.00 |
| 40 – 44 | C- | 1.70 |
| 35 – 39 | D+ | 1.30 |
| 30 – 34 | D | 1.00 |
| 00 – 29 | E | 0.00 |

## 11. தரப்புள்ளிச் சராசரி

மாணவர்களின் ஒட்டுமொத்த கல்விசார் அடைவின் பெறுமதியை எடுத்துக்காட்டுவதே தரப்புள்ளிச் சராசரியாகும். இதனைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

| பாட அலகு | பெற்ற தரம் GPV | கற்கைகால அளவுப்பெறுமதி Credit | தரப்புள்ளிப் பெறுமதி | மொத்த தரப்புள்ளிப் பெறுமதி |
|---|---|---|---|---|
| MAT 10103 | A | 3 | 4.00 | 12.00 |
| MAT 10203 | A- | 3 | 3.70 | 11.10 |
| MAT 10303 | B+ | 3 | 3.30 | 9.90 |
| MAT 10403 | B | 3 | 3.00 | 9.00 |
| MAT 10503 | B- | 3 | 2.70 | 7.10 |
| MAT 10602 | B | 2 | 3.00 | 6.00 |
| மொத்தம் | | 17 | | 55.10 |

தரப்புள்ளிச் சராசரி $= \frac{55.10}{17} = 3.24$

இரண்டு பருவங்களிலும் பெற்ற தரப்புள்ளிச் சராசரிகளின் அடிப்படையில் வகுப்பு வழங்கப்படும்.

## 12. வகுப்பு அளித்தல்

| CGPA | வகுப்பு |
|---|---|
| 3.70 – 4.00 | முதலாம் வகுப்பு |
| 3.30 – 3.69 | இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) |
| 3.00 – 3.29 | இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு) |
| 2.50 – 2.90 | சித்தி |

## 13. பட்டம் வழங்கத் தகுதிபெறுதல்

ஒரு மாணவன் பின்வரும் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்யும் பட்சத்தில் முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொள்வார்.

1. தரப்புள்ளிச் சராசரி 2.50 இற்குக் குறையாமல் பெற்றிருத்தல்.
2. அத்துடன் ஆய்வேடு உட்பட எல்லாப் பாடங்களிலும் C+ அல்லது அதற்கு மேலான தரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## 14. பட்டப்பின் டிப்ளோமா வழங்குதல்

பட்டம் பெறுவதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்ய முடியாத ஒருவர் 2.00 இற்கு குறையாத தரப்புள்ளிச் சராசரியினைப் பெற்றிருந்தால் பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தைப் பெறுவதற்கு தகுதியுடையவராவார்.

பட்டம் பெறுவதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யமுடியாத ஒருவர்/ ஆய்வேட்டைச் சமர்ப்பிக்க முடியாத ஒருவர் 10 பாடங்களிலும் 'C-' இற்கு குறையாது பெற்றிருந்தால் அவர் பட்டப்பின் டிப்ளோமாப் பட்டத்தைப் பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவார்.

## 15. பட்டம் செல்லுபடியாகும் திகதி

இரண்டாம் பருவத்தின் இறுதிப்பரீட்சையில் ஆய்வேடு சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து பட்டம் செல்லுபடியாகும்.

## 16. மீள்பரீட்சை

- குறித்த பட்டத்தைப் பெறுவதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்ய முடியாத மாணவர்கள் ஒரு தடவை மீள்பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.
- ஒன்றிற்கு மேற்பட்ட பாட அலகுகளில் 'C' தரத்தைப் பெற்ற மாணவர் ஒருவர் குறித்த பாட அலகுகளுக்கு மீளவும் தோற்றும் பட்சத்தில் குறைந்தது 'C+' தரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆயினும் மீள்பரீட்சையின் போது வழங்கப்படும் அதியுயர் தரம் 'B+' மட்டுமே.
- அதிகாரமளிக்கப்படாமல் அல்லது செல்லுபடியாகக்கூடிய காரணம் ஏதும் இல்லாமல் தேர்வு ஒன்றுக்குத் தோற்றத்தவறும் மாணவர்கள் குறித்த பாட அலகில் சித்தியடையத் தவறியவர்களாகவே கருதப்படுவர்.

- மருத்துவக் காரணங்களினால் தேர்வு ஒன்றுக்குத் தோற்றத்தவறிய மாணவர் ஒருவர் மருத்துவச் சான்றிதழையும், விண்ணப்பக் கடிதத்தையும் மீள்பரீட்சைக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும். பல்கலைக்கழக மருத்துவ அலுவலரினால் இச்சான்றிதழ் சிபாரிசு செய்யப்படல் வேண்டும். இச்சான்றிதழ் குறிப்பிட்ட விடைத்தாளின் தேர்வு முடிவுற்று இரண்டு கிழமைக்குள் உயர்பட்டப்படிப்புக்கள் பீடப் பீடாதிபதியின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் உயர்பட்டப்படிப்புக்கள் பீடச்சபையின் சிபாரிசிற்கும், மூதவையின் அங்கீகாரத்திற்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மருத்துவக் காரணங்களினால் அரையாண்டுப் பருவ இறுதித் தேர்வுக்குச் சமுகமளிக்காத மாணவர்கள் அடுத்த மிக முந்திய சந்தர்ப்பத்தில் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் இது முதலாவது முயற்சி எனக் கருதப்படல் வேண்டும்.
- மீள் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் வகுப்பினைப் பெறுவதற்கு தகைமையற்றவர்கள்.
- மீளத் தோற்றும் பரீட்சார்த்திகள் அல்லது பரீட்சைக்குச் சமுகமளிக்காதவர் விடயத்தில் கற்கைக்கால மதிப்பீட்டுப் புள்ளிகள் அடுத்துவரும் அரையாண்டுப் பரீட்சை முடிவுகளுக்கு முன் கொண்டுசென்று சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்.

## 17. விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

தமிழில் முதுமாணிக் கற்கைநெறிக்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம்பெற்றவர்களாகவோ அல்லது பொருத்தமான வேறு தகைமைகளை உடையவர்களாகவோ இருத்தல் வேண்டும். இவர்கள் உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தினால் நியமிக்கப்படும் தேர்வுக்குழு ஒன்றினால் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

## 18. கால அட்டவணை

**முதலாம் அரையாண்டு**

| | |
|---|---|
| விரிவுரைகள் | 10 வாரம் |
| நடு அரையாண்டு விடுமுறை | 01 வாரம் |
| விரிவுரைகள் | 10 வாரம் |
| கற்கை விடுமுறை | 02 வாரம் |
| பரீட்சை | 02 வாரம் |

| இல | அலகு | தலைப்பு | விரிவுரைக்காலம் |
|---|---|---|---|
| 01 | MAT 10103 | தமிழ் இலக்கணமரபு பற்றிய உயர்கற்கை | 45 மணித்தியாலம் |
| 02 | MAT 10203 | தெரிவுசெய்யப்பட்ட பாடநூல்கள் | 45 மணித்தியாலம் |
| 03 | MAT 10302 | ஒப்பியல் ஆய்வு | 30 மணித்தியாலம் |
| 04 | MAT 10403 | தமிழ் இலக்கிய வரலாறு | 45 மணித்தியாலம் |
| 05 | MAT 10503 | தமிழ்க் காவிய இலக்கியக் கற்கை (சிறப்பாகத் தமிழில் உள்ள பெருங்காவியங்களை மையப்படுத்தியது) | 45 மணித்தியாலம் |
| 06 | MAT 10602 | ஆய்வு முறையியலும் தமிழாய்வும் | 30 மணித்தியாலம் |

**இரண்டாம் அரையாண்டு**

| | |
|---|---|
| விரிவுரைகள் | 10 வாரம் |
| நடு அரையாண்டு விடுமுறை | 01 வாரம் |
| விரிவுரைகள் | 07 வாரம் |
| கற்கை விடுமுறை | 02 வாரம் |
| பரீட்சை | 02 வாரம் |

| இல | அலகு | தலைப்பு | விரிவுரைக்காலம் |
|---|---|---|---|
| 01 | MAT 20103 | ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு | 45 மணித்தியாலம் |
| 02 | MAT 20203 | இலக்கியக் கொள்கைகளும் விமர்சனமும் | 45 மணித்தியாலம் |
| 03 | MAT 20302 | தமிழில் மொழிபெயர்ப்புப் பற்றிய கற்கை | 30 மணித்தியாலம் |
| 04 | MAT 20403 | தெரிவுசெய்யப்பட்ட நவீன இலக்கிய கர்த்தாக்கள் | 45 மணித்தியாலம் |
| 05 | MAT 20502 | தமிழர் பண்பாட்டு வரலாறு | 30 மணித்தியாலம் |
| 06 | MAT 20506 | ஆய்வறிக்கை | |

## முதலாம் அரையாண்டு

| | |
|---|---|
| **பாடநெறி அலகு** | **MAT 10103** |
| **பாடநெறித் தலைப்பு** | **தமிழ் இலக்கணமரபு பற்றிய உயர்கற்கை** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **150 மணித்தியாலங்கள்: (45 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 105 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**

தமிழ் இலக்கண நூல்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழியின் இயல்புகளை இனங்கண்டு, அவற்றினைப் பாகுபடுத்தி திறனாய்வு முறையில் ஒப்பிட்டுஆய்வு செய்வதற்கு இப்பாடநெறி உதவும்.

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**

இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- ஐந்திலக்கணமரபு பற்றி விளக்குவர்.
- நவீன தமிழ் இலக்கணக்கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்வர்.
- தமிழ் இலக்கண ஆக்கங்கள் பற்றிய வரலாற்றை விமர்சிப்பர்.
- தமிழ்மொழியிலுள்ள எழுத்துப் பற்றிய கோட்பாட்டினை இனங்கண்டு பாகுபடுத்துவர்.

- தமிழில் சொல், தொடர் பாகுபாட்டினைப் பட்டியற்படுத்துவர்.
- அகம், புறம் என்பவற்றின் இயல்புகளை வகைப்படுத்துவர்.
- தமிழ் இலக்கண நூல்களான தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் முதலான நூல்களை ஒப்பிட்டுப் பார்ப்பர்.
- தமிழ் இலக்கண மரபினை நவீன மொழியியல் பின்புலத்தில் ஒப்பிடுவர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

இப் பாடநெறி அலகில் பின்வரும் இலக்கிய ஆக்கங்களை மாணவர்கள் நுண்ணறிவுடன் கற்கமுடியும்.

1) தமிழ் இலக்கண ஆக்கங்கள் பற்றிய வரலாறு.
2) தமிழில் ஐந்திலக்கணமரபு
3) தமிழில் எழுத்துப் பற்றிய கோட்பாடு.
4) தமிழில் சொல், தொடர் பற்றிய கோட்பாடு.
5) அகம், புறம் தொடர்பான கோட்பாடுகள்.
6) தொடரிலக்கணம்.
7) நவீன இலக்கணக் கோட்பாடுகள்.
8) தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் பற்றிய ஒப்பியல் நோக்கு.
9) தமிழ் இலக்கண மரபும் மொழியியலும்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:**

விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்

**பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:**

1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

| | | |
|---|---|---|
| கட்டுரை | 10% | 30% |
| குழுச்செயற்பாடு | 10% | |
| அளிக்கைசெய்தல் | 10% | |
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **எட்டு** | | 70% |

| | |
|---|---|
| **வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**


1. சண்முகதாஸ். அ., (1977), மூன்றாம் பதிப்பு, தமிழ்மொழி இலக்கண இயல்புகள், பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு.
2. வேலுப்பிள்ளை. ஆ., (1966), தமிழ் வரலாற்றிலக்கணம், பாரிநிலையம், சென்னை.
3. நு.ஃமான். எம். ஏ., (1999), அடிப்படைத் தமிழ் இலக்கணம், வாசகர்சங்க வெளியீடு, கொழும்பு.
4. செல்வரஞ்சிதம். சி., (2013), மரபு இலக்கணமும் நவீனமும், எஸ். எஸ். ஆர். பிறின்டேர்ஸ், யாழ்ப்பாணம்.
5. நாகலிங்கம், க., செந்தமிழ் இலக்கண விளக்கம், 1, 2, 3 ஆம் பகுதிகள், மஹாத்மா அச்சகம், ஏழாலை, 2000.
6. மனோகரன், ச., (2012), திராவிட மொழிகளும் திராவிடமொழி ஆய்வுகளும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.


| | |
|---|---|
| **பாடநெறி அலகு** | **MAT 10203** |
| **பாடநெறித் தலைப்பு** | **தெரிவுசெய்யப்பட்ட பாடநூல்கள்** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **150 மணித்தியாலங்கள்: (45 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 105 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**

காலந்தோறும் எழுந்த இலக்கியங்களிலிருந்து வகைமாதிரிகளைக் கற்பதால் இலக்கியத்திற்கும், சமூகத்திற்குமான உறவைப் புரிந்துகொள்வதுடன், கலையாக்க முறைமையினையும் கண்டுகொள்ள இக்கற்கைநெறி வழிவகுக்கும்.

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**

- ஒவ்வொரு இலக்கிய நூலினதும் சமூக, அரசியல், பண்பாட்டு பின்னணி பற்றி விளக்குவர்.
- ஒவ்வொரு இலக்கியத்தின் பொருள்மரபினையும் அடையாளங்காண்பர்..

- ஒவ்வொரு இலக்கியத்தினதும் உள்ளடக்கம் பற்றி விமர்சிப்பர்.
- ஒவ்வொரு இலக்கியத்தினதும் மொழிவளர்ச்சி நிலைகளை அடையாளங்காண்பர்.
- இலக்கியங்களின்மூலம் கவிஞர்களின் வெளிப்பாட்டு முறைமை, உத்தி, குறியீடு, படிமம் முதலான இலக்கியச் சிறப்புக்களை விளங்கிக்கொண்டு, அவற்றை நயக்கும் மனப்பாங்கினைப் பெறுவர்.
- கால அடிப்படையில் இலக்கியங்களில் ஏற்பட்ட வளர்ச்சிமுறைகளை ஒப்பிட்டுப் பார்ப்பர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

1. புறநானூறு (தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து பாடல்கள்)
2. அகநானூறு (தேர்ந்தெடுக்கப்பட்ட பத்துப் பாடல்கள்)
3. நெடுநல்வாடை
4. திருக்குறள் (தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து அதிகாரங்கள்)
5. ஆண்டாள்பாசுரங்கள் (தெரிவுசெய்யப்பட்டவை)
6. மதுரைக்காஞ்சி
7. நந்திக்கலம்பகம், சிறுபாணாற்றுப்படை, முத்தொள்ளாயிரம் மற்றும் தாயுமானவர் பாடல்கள் உள்ளிட்டவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பகுதிகள்
8. மேலே குறிப்பிட்ட இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அவ்வக்காலப் பகுதிகளின் சமூக, அரசியல் மற்றும் கலாசாரப் பின்புலங்களை அறிந்து கொள்ளுதல்.
9. இலக்கியங்களின் உள்ளடக்கம், வடிவம், யாப்பு முதலியவற்றை விளங்கிக்கொள்ளுதல்.
10. ஒவ்வொரு இலக்கியத்தினதும் வேறுபட்ட இலக்கிய நோக்கும், இலக்கிய உத்தி, மொழிநடைச் சிறப்பு என்பவற்றை விளங்கிக்கொள்ளுதல்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:**

விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்

**பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:**

1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

| | | |
|---|---|---|
| கட்டுரை | 10% | 30% |
| குழுச்செயற்பாடு | 10% | |
| அளிக்கைசெய்தல் | 10% | |

| | |
|---|---|
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **எட்டு வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | 70% |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**


1. மாணிக்கம். சுப. வ., (1962), தமிழ்க்காதல், பாரிநிலையம், சென்னை.
2. கைலாசபதி. க., (1966), பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், பாரிநிலையம், சென்னை.
3. கேசவன். கோ., (1973), மண்ணும் மனித உறவுகளும், வள்ளல் பாரி அச்சகம், சென்னை.
4. விசாகரூபன். கி., (2008), சங்க இலக்கியம், பதிவும் பார்வையும், மலர் பதிப்பகம், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
5. அறவாணன், க. ப., (1978), அற்றைநாட் காதலும் வீரமும், நாவலர் ஆர்ட் பிறிண்டேர்ஸ், சென்னை.
6. ராஜன், கா., (2004), தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
7. சுப்பிரமணியன், ந., (1986), சங்ககால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.


| | |
|---|---|
| **பாடநெறி அலகு** | **MAT 10302** |
| **பாடநெறித் தலைப்பு** | **ஒப்பியல் ஆய்வு** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **100 மணித்தியாலங்கள்: (30 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 70 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**

ஒப்பியல் தொடர்பான கோட்பாட்டு அறிவினைப் பெற்றுக்கொண்டு அதனை வெவ்வேறு மொழி, பண்பாட்டுப் பின்புலத்தில் தோன்றிய இலக்கியங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பிரயோக ஆற்றலைப் பெற்றுக்கொள்ள இக்கற்கைநெறி உதவும்.

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**

இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- ஒப்பியல் ஆய்வின் முக்கியத்துவத்தினை விளக்குவர்.
- ஒப்பியலையும், ஒப்பீட்டாய்வையும் வேறுபடுத்தி இனங்காண்பர்.
- ஒப்பியலாய்வு மேலைத்தேசத்தில் தோன்றி வளர்ந்த வரலாற்றை மதிப்பிடுவர்.
- ஒப்பியல்இலக்கிய ஆய்வுக் கோட்பாடுகளை விளக்குவர்.
- தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்ப்பர்.
- தமிழ், ஆங்கில இலக்கியங்களை வேறுபடுத்துவர்.
- தமிழ், சிங்கள இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்ப்பர்.

- தமிழ், யப்பானிய இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்ப்பர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

1. ஒப்பியலாய்வின் தோற்றம், வளர்ச்சி
2. ஒப்பியலாய்வின் தேவை, பயன், ஆய்வாளருக்குரிய தகுதி.
3. ஒப்பியலாய்வும் ஒப்பீட்டாய்வும்.
4. ஒப்பியல் இலக்கியக் கோட்பாடுகள்
5. தமிழ், சமஸ்கிருத இலக்கிய ஒப்பீடு
6. தமிழ், ஆங்கில இலக்கிய ஒப்பீடு
7. தமிழ், சிங்கள இலக்கிய ஒப்பீடு
8. தமிழ், ஜப்பானிய இலக்கிய ஒப்பீடு
9. தமிழியலில் ஒப்பியலாய்வு மற்றும் மொழிபெயர்ப்பு

**கற்றல் கற்பித்தல் முறைகள்:**

விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்

**பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:**

1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

| | | |
|---|---|---|
| கட்டுரை | 10% | 30% |
| குழுச்செயற்பாடு | 10% | |
| அளிக்கைசெய்தல் | 10% | |
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு இரண்டு மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | | 70% |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**

1) கைலாசபதி, க. 1978, ஒப்பியல் இலக்கியம், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை,
2) சச்சிதானந்தன், வை. 1985, ஒப்பிலக்கியம், ஆக்ஸ்போட் யூனிவர்சிடி பிரஸ், சென்னை,
3) தமிழண்ணல், 1973, ஒப்பிலக்கிய அறிமுகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
4) காஞ்சனா, இரா. 2001, ஒப்பிலக்கிய மரபும் திறனும், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்,
5) Susan Bassnett, 1998, Comparative Literature – A critical Introduction, Oxford University Press.

| பாடநெறி அலகு | **MAT 10403** |
|---|---|
| **பாடநெறித் தலைப்பு** | **தமிழ் இலக்கிய வரலாறு** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **150 மணித்தியாலங்கள்: (45 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 105 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**
சங்ககாலம் முதல் தற்காலம் வரையான இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு சமூக வரலாற்றைப் புரிந்துகொள்ள இக்கற்கைநெறி உதவும்.

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**
இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- தமிழ்இலக்கிய வரலாற்றுப் பின்னணியை இனங்கண்டு கொள்வர்.
- அதனைக் கால அடிப்படையில் பகுத்துப் பார்ப்பர்.
- கால அடிப்படையில் எழுந்த இலக்கியங்களை இனங்கண்டு, வகைப்படுத்தி அதன் சமூகப் பின்னணியினை அடையாளங் காண்பர்.
- இலக்கியங்களினூடாக சமுதாய பண்பாட்டு வரலாற்றை இனங்காண்பர்.
- தமிழ்இலக்கிய வரலாற்றின் தொடர்ச்சியை ஒன்றிணைத்து மதிப்பிடுவர்.
- குறித்த காலப்பகுதியில் தோன்றிய இலக்கியம் பற்றி விமர்சிப்பர்.
- இலக்கியப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை ஒப்பிட்டுப் பார்ப்பர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

1. இலக்கிய வரலாறு குறித்த வரைவிலக்கணம்
2. இலக்கிய வரலாறொன்றுக்கான அடிப்படை ஆதாரங்கள் / மூலங்கள்
3. தமிழிலக்கிய வரலாற்றுக் காலப் பகுப்புக்களும் அவற்றின் பொருத்தப்பாடுகளும்
4. தமிழிலக்கிய வரலாற்றுக் காலகட்டங்கள் ஒவ்வொன்றுக்குமான அரசியல், பொருளாதார, சமூகவியல் மற்றும் பண்பாட்டுப் போக்குகள்.
5. சங்கஇலக்கியம் குறித்த இனவரைவியல் பார்வை.
6. இலக்கிய மானிடவியல் தொடர்பான அறிமுகம்.
7. சங்க இலக்கியம் குறித்த கற்கை
8. சங்க இலக்கியத்திற்குப் பின்னதான இலக்கிய முயற்சிகள் குறித்த கற்கை.

9. பல்லவர் காலத்து இலக்கிய முயற்சிகள் குறித்த கற்கை.
10. சோழர்கால இலக்கிய முயற்சிகள்.
11. விஜயநகர நாயக்கர் காலகட்ட இலக்கிய வரலாற்றுப் போக்குகள்
12. ஐரோப்பியர் வருகையும் அக்காலகட்டத்து இலக்கிய வளர்ச்சிப் போக்குகளும்
13. நவீன கால இலக்கிய வளர்ச்சி

**கற்றல் கற்பித்தல் முறைகள்:**

விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்

**பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:**

1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

| | | |
|---|---|---|
| கட்டுரை | 10% | 30% |
| குழுச்செயற்பாடு | 10% | |
| அளிக்கைசெய்தல் | 10% | |
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **எட்டு வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | | 70% |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**


1) பக்தவத்சலபாரதி, (2012), (2002), தமிழர் மானிடவியல், புத்தாநந்தம், அடையாளம்.
2) ” (2012), பாணர் இனவரைவியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3) மாதையன், பெ., (2011), சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்பிளிக்கேசன், சென்னை.
4) மாதையன், பெ., (2011), தமிழ் செவ்வியல் இலக்கியங்கள் - காலமும் கருத்தும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
5) சுப்பிரமணியன், ந., (1986), சங்ககால வாழ்வியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6) வேலுப்பிள்ளை, ஆ., 1985, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், சென்னை.
7) கேசவன்.கோ., 1979, மண்ணும் மனிதஉறவுகளும்,வள்ளல் பாரிஅச்சகம்,சென்னை.

| பாடநெறி அலகு | **MAT 10503** |
|---|---|
| **பாடநெறித் தலைப்பு** | **தமிழ்க் காவிய இலக்கியக் கற்கை (சிறப்பாகத் தமிழில் உள்ள பெருங்காவியங்களை மையப்படுத்தியது)** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **150 மணித்தியாலங்கள்: (45 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 105 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**

காவிய உருவாக்கத்திற்கான பின்னணியைத் தெரிந்துகொள்வதுடன் அதன் உருவம், உள்ளடக்கம் என்பன பற்றியும் எழுச்சி, வீழ்ச்சி பற்றியும் தெளிவாக அறிந்துகொள்ள இக்கற்கைநெறி உதவும்.

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**

இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- காவியம் என்றால் என்ன என்பதை வரையறுப்பர்.
- தமிழில் காவிய இலக்கணத்தை வரையறுப்பதில் உள்ள சிக்கல்களை எளிமைப்படுத்துவர்.
- தமிழ், சமஸ்கிருத காவிய, மேலைத்தேய காவியங்களுக்கிடையிலான வேறுபாட்டினை இனங்காண்பர்.
- காவியத்தின் தோற்றத்திற்கான சமூக வரலாற்றுப் பின்னணியினை அடையாளங்காண்பர்.
- தமிழிலுள்ள காவியங்களின் கட்டமைப்பு பற்றி பரீட்சிப்பர்.
- தமிழிலுள்ள காவியங்களின் பாடுபொருள் பற்றி விமர்சிப்பர்.
- தமிழிலுள்ள காவியங்களின் இலக்கிய உத்திகள் பற்றி விளக்குவர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

1. காவியம் தொடர்பான விளக்கம்.
2. தமிழ், மேலைத்தேய, சமஸ்கிருத காவியங்களின் கட்டமைப்பு.
3. தமிழில் காவிய இலக்கணம் பற்றி வரையறுப்பதில் உள்ள சிக்கல்கள்
4. காவியத்துக்கும் புராணத்துக்குமிடையேயுள்ள உறவு
5. கம்பராமாயணத்தைத் துணைக்கொண்டு காவியத்தின் கட்டமைப்பு.
6. பாத்திரவார்ப்பும் கிளைக்கதைகளும்
7. தமிழ்க் காவியங்களின் கட்டமைப்பு
8. பாடுபொருள்
9. தமிழ்க் காவியங்களின் இலக்கிய உத்திகள்

| | | |
|---|---|---|
| **கற்றல் கற்பித்தல் முறைகள்:**<br>விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள் | | |
| **பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:** | | |
| 1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு | | |
| கட்டுரை | 10% | 30% |
| குழுச்செயற்பாடு | 10% | |
| அளிக்கைசெய்தல் | 10% | |
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **எட்டு வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | | 70% |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**


1) மணவாளன், அ., 2005, இலக்கிய ஒப்பாய்வு காப்பியங்கள், NCBH, சென்னை.
2) சீனிச்சாமி, எஸ்., 1985, காப்பியக் கொள்கைகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
3) மாணிக்கம், வ. சுப., 1990, காப்பியப் பார்வை, மணிவாசகர் பதிப்பகம்,சென்னை.
4) ஞானசம்பந்தன், அ. ச., 1999, பெரியபுராணம் ஓர் ஆய்வு, கங்கை புத்தகநிலையம், சென்னை.
5) எஸ். வையாபுரிப்பிள்ளை, 1966, காவியகாலம், பாரி நிலையம், சென்னை.


| | |
|---|---|
| **பாடநெறி அலகு** | **MAT 10602** |
| **பாடநெறித் தலைப்பு** | **ஆய்வு முறையியலும் தமிழாய்வும்** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **100 மணித்தியாலங்கள்: (30 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 70 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |
| **பாடநெறியின் நோக்கங்கள்:**<br>தெரிந்தெடுக்கப்பட்ட பொருண்மைகளை ஆய்வுபூர்வமாக அணுகுவதற்கும், எழுதுவதற்குமான முறையியலைக் கற்றுக்கொள்வதுடன் தமிழில் அதன் பிரயோகத் | |

<table>
<tr><td colspan="3">தன்மையினை வரலாற்று நோக்கிலும், கோட்பாட்டு நோக்கிலும் அறிந்துகொள்ள இக்கற்கைநெறி உதவும்.</td></tr>
<tr><td colspan="3">பாடநெறிக் கற்றல் பேறுகள்:<br>இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,<br>• ஆய்வுமுறையியல் பற்றி வரையறுப்பர்.<br>• ஆய்வுப் பிரச்சினையினை இனங்காண்பர்.<br>• ஆய்விற்கான படிமுறை முறையியலைப் பிரயோகிப்பர்.<br>• ஆய்வேடு ஒன்றினை சரிவர எழுதும் மனப்பாங்கினைப் பெறுவர்.<br>• ஆய்வுத்தலைப்பினைத் தேர்வுசெய்தல், தேர்ந்தெடுப்பதற்கான உபாயங்களைக் கண்டறியும் திறனைப் பெறுவர்.<br>• தமிழாராய்ச்சி முன்னோடிகளின் விபரங்களைத் தொகுப்பர்.<br>• மேலைத்தேய, கீழைத்தேய தமிழாய்வு வளர்ச்சி பற்றி விமர்சிப்பர்.<br>• தமிழாராய்ச்சியின் பல்வேறு வளர்ச்சிக் கட்டமைப்பு பற்றி விளக்கும் திறனைப் பெறுவர்.<br>• தமிழாய்விற்கான களங்களை வடிவமைப்பர்.</td></tr>
<tr><td colspan="3">பாடநெறியின் உள்ளடக்கம்:<br>1. ஆய்வுமுறையியல்<br>2. மனிதப் பண்பியல் ஆய்வுகள்.<br>• இயல்புகள்<br>• அடிப்படைகள்<br>• ஆய்வுநோக்கு<br>• ஆய்வு முறையியல்கள்<br>• ஆய்விற்கான தரவுகள்<br>• ஆய்வு ஒருங்கிணைப்பு<br>• ஆய்வுப்பிரச்சினை<br>• ஆய்வின் கருதுகோள்<br>• ஆய்வுஅமைப்பு<br>3. தமிழாராய்ச்சி முன்னோடிகள்<br>4. கீழைத்தேய, மேலைத்தேய ஆய்வு வளர்ச்சி.<br>5. தமிழாராய்ச்சியின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்கள்<br>6. தமிழாய்விற்கான களங்கள்</td></tr>
<tr><td colspan="3">கற்றல் கற்பித்தல் முறைகள்:<br>விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்</td></tr>
<tr><td colspan="3">பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:</td></tr>
<tr><td colspan="3">1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு</td></tr>
<tr><td>கட்டுரை</td><td>10%</td><td rowspan="2">30%</td></tr>
<tr><td>குழுச்செயற்பாடு</td><td>10%</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| அளிக்கைசெய்தல் | 10% | |
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (இரண்டு மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | | 70% |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**

1) முத்துச் சண்முகன், வேங்கட்ராமன், சு., 1980, இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள், முத்துப் பதிப்பகம், மதுரை.
2) சுப்பிரமணிய அய்யர், ஏ. வி., 1959, தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, அமுதநிலையம், சென்னை.
3) தமிழண்ணல், 1983, தமிழியல் ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
4) பஞ்சாங்கம், க., 1990, தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு, செல்வன் பதிப்பகம், புதுவை.
5) மதியழகன், ம., 1996, தமிழியல் ஆய்வு வரலாறு, ப்ரீத் வெளியீட்டகம், புதுச்சேரி.

# இரண்டாம் அரையாண்டு

| | |
|---|---|
| **பாடநெறி அலகு** | **MAT 20103** |
| **பாடநெறித் தலைப்பு** | **ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **150 மணித்தியாலங்கள்: (45 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 105 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**
இலக்கியங்களைக் கருவியாகக் கொண்டு ஈழத்துத் தமிழ் மக்களின் சமுதாய பண்பாட்டு வரலாற்றை விளங்கிக்கொள்வதுடன் இலக்கியம், புலவர்கள், காலவேறுபாடுகள் என்பன தொடர்பான தெளிவினையும் பெற்றுக்கொள்ள இக்கற்கைநெறி உதவும்.

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**
இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடர்ச்சியினை அறிந்துகொள்வதிலுள்ள சிக்கல்களை அடையாளங் காண்பர்.
- கி. பி. 13 ஆம் நூற்றாண்டு முதல் நவீன காலம்வரை எழுந்த இலக்கியங்களை இனங்கண்டு அவற்றினை வகைப்படுத்துவர்.
- இலக்கியம் எழுந்த காலப் பின்னணிகளை விளக்குவர்.
- இலக்கியங்களின் வளர்ச்சிப் போக்கினை வித்தியாசம் காண்பர்.
- இலக்கியத்தின் பாடுபொருளுக்கும், சமூக, பொருளாதாரப் பின்னணிக்கும் இடையிலான தொடர்பினை நுணுக்கமாக விமர்சிப்பர்.
- ஈழத்து இலக்கியங்களைக் கற்று அவற்றின் வடிவம் தொடர்பாக மதிப்பிடுவர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

1. ஈழத்து இலக்கிய வரலாற்றினை அறிந்துகொள்வதற்கான ஆதாரங்கள்.
    - மகாவம்சம் கூறும் தகவல்கள்
    - ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய தகவல்கள்.
    - பழந்தமிழ்க் கல்வெட்டுச் சான்றுகள்.
    - பொலநறுவைக்கால ஆட்சி
    - தம்பதெனியாக்கால ஆட்சி
    - நாயன்மார்களின் காலச் சான்றுகள்
2. ஈழத்துத்தமிழ் நாட்டார் வழக்காற்றியல் சான்றுகள்.
3. யாழ்ப்பாண மன்னர்கால இலக்கியப் பாரம்பரியம்.
4. போர்த்துக்கேயர்கால இலக்கியப் பாரம்பரியம்.
5. ஒல்லாந்தர்கால இலக்கியப் பாரம்பரியம்.
6. 19 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழிலக்கியம்.
7. 20 ஆம் நூற்றாண்டு முதல் இற்றை வரையான ஈழத்துத்தமிழிலக்கியம்.

(மறுமலர்ச்சி இயக்கம், முற்போக்கு இயக்கம், தமிழ்த்தேசிய இயக்கம், புலம்பெயர் இலக்கியம், நவீன தமிழ்க் கவிதையின் வளர்ச்சி)

**கற்றல் கற்பித்தல் முறைகள்:**

விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்

**பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:**

1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

| | | |
|---|---|---|
| கட்டுரை | 10% | 30% |
| குழுச்செயற்பாடு | 10% | |
| அளிக்கைசெய்தல் | 10% | |
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - | | 70% |

| | |
|---|---|
| கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **எட்டு வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**

1) சிவலிங்கராசா, எஸ். 2009., ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, குமரன் புத்தக இல்லம், சென்னை.
2) நடராசா, FX.C, 1970. ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு, அரசு வெளியீடு, கொழும்பு.
3) நடராசா, க. செ., 1982 ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, தமிழ்ச் சங்கம், கொழும்பு.
4) பத்மநாதன், சி., 2004, ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
5) மௌனகுரு. சி., சித்திரலேகா மௌனகுரு, நு.ஃமான். எம். ஏ., 1979, இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், யாழ்ப்பாணம்.
6) இரகுநாதன், ம., (2013), முற்போக்கு இயக்கமும் ஈழத்தத் தமிழ்ச் சிறுகதைகளும், எஸ். எஸ். ஆர். பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.

| | |
|---|---|
| **பாடநெறி அலகு** | **MAT 20203** |
| **பாடநெறித் தலைப்பு** | **இலக்கியக் கொள்கைகளும் விமர்சனமும்** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **150 மணித்தியாலங்கள்: (45 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 105 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**

இலக்கியக் கொள்கைகளையும் அவற்றின் வளர்ச்சியினையும் இனங்கண்டு அவற்றை இலக்கியங்களில் பிரயோகிக்கும் அறிவினைப் பெற்றுக்கொள்ள இக்கற்கைநெறி உதவும்.

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**

இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- தொல்காப்பியரது கவிதைக் கொள்கைகளையும், பண்டைய தமிழ் இலக்கியங்களினது கவிதைக் கொள்கைகளையும் அடையாளங்காண்பர்.
- தண்டியலங்காரம், வீரசோழியம் மற்றும் பாட்டியல் நூல்களில் அறியவரும் புதிய இலக்கியக் கொள்கை மாதிரிகளை வகைப்படுத்துவர்.

- நவீன இலக்கியக் கொள்கைகளை விளக்குவர்.
- பண்டைய கவிதைக் கொள்கைக்கும், தமிழின் நவீன இலக்கியக் கொள்கைக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை ஒப்பிட்டுப்பார்ப்பர்.
- நவீன திறனாய்வுக் கோட்பாடுகளை வரையறுப்பர்.
- தமிழ் இலக்கியங்களைத் திறனாய்வு செய்கின்ற மனப்பாங்கினைப் பெறுவர்.
- தமிழிலே மூலபாடத் திறனாய்வு செய்வதற்கான திறனைப் பெறுவர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

1. தொல்காப்பியக் கவிதைக் கொள்கைகள்.
2. தமிழில் இலக்கியங்கள், இலக்கண நூல்கள் (தண்டியலங்காரம், வீரசோழியம்), பாட்டியல் நூல்கள் முதலானவற்றின் வழி அறியவரும் கவிதைக் கொள்கை.
3. நவீன இலக்கியக் கொள்கைகள்.
4. நவீன விமர்சனக் கோட்பாடுகள்
5. விமர்சனக் கோட்பாடுகளின் வழி இலக்கியப்படைப்புக்களை விமர்சனம் செய்யப் பயிற்றுவித்தல்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:**

விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்

**பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:**

1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

| | | |
|---|---|---|
| கட்டுரை | 10% | 30% |
| குழுச்செயற்பாடு | 10% | |
| அளிக்கைசெய்தல் | 10% | |
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **எட்டு வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | | 70% |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**


1. கைலாசபதி, க., 1999, இலக்கியமும் திறனாய்வும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
2. நடராசன், தி. சு., 1996, திறனாய்வுக் கலை, NCBH, சென்னை.
3. பஞ்சாங்கம், க., 2007, தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அன்னம், தஞ்சாவூர்.
4. பூரணச்சந்திரன், க., 2007, தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
5. தமிழவன், 1982, அமைப்பியலும் அதன் பிறகும், அடையாளம், சென்னை.

| | |
|---|---|
| **பாடநெறி அலகு** | **MAT 20302** |
| **பாடநெறித் தலைப்பு** | **தமிழில் மொழிபெயர்ப்புப் பற்றிய கற்கை** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **100 மணித்தியாலங்கள்: (30 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 70 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**

தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்தனியே பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டவர்கள் தமிழிலுள்ளவற்றை ஆங்கிலத்திற்கும் ஆங்கிலத்திலுள்ளவற்றைத் தமிழுக்கும் மொழி பெயர்ப்பதில் ஏற்படுகின்ற சிக்கல்களைப் போக்குவதே இப்பாடநெறியின் நோக்கம்

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**

இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- மொழி பெயர்ப்புத் தொடர்பான கோட்பாடுகளை வரையறுப்பர்.
- மொழி பெயர்ப்பின் போது கவனிக்க வேண்டிய விடயங்களைப் பட்டியற்படுத்துவர்.
- தமிழிலுள்ள பல்வகைப்பட்ட மொழி பெயர்ப்புக்களைச் செம்மைப்படுத்துவர்.
- தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் மொழி பெயர்ப்பதற்கான திறனைக் கட்டியெழுப்புவர்.
- தமிழிலுள்ள பண்பாட்டு எழுத்தாக்கங்களை மொழிபெயர்ப்பதிலுள்ள சிரமங்களை விமர்சிப்பர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

1. தமிழ் மொழிபெயர்ப்பு வரலாறு.
2. மொழி பெயர்ப்புக் கோட்பாடுகள்.
3. மொழிபெயர்ப்பு உத்திகள்.
4. தமிழிலுள்ள பல்வகைப்பட்ட மொழி பெயர்ப்புக்களும் அவற்றின் சாதனைகளும்.
5. பண்பாட்டு எழுத்தாக்கங்களை மொழிபெயர்ப்பதிலுள்ள சிரமங்கள்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:**

விரிவுரைகள், செய்ம்முறைப் பயிற்சிகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்.

**பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:**

1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

| | | |
|---|---|---|
| கட்டுரை | 10% | 30% |

| | | |
|---|---|---|
| குழுச்செயற்பாடு | 10% | |
| அளிக்கைசெய்தல் | 10% | |
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (இரண்டு மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | | 70% |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**


1. மருதநாயகம் இரா., 2006, மொழிபெயர்ப்பு நெறிமுறைகள், அபிநயா பதிப்பகம், சென்னை.
2. வளர்மதி. மு., 1987, மொழிபெயர்ப்புக் கலை, திருமகள் நிலையம், சென்னை.
3. முருகேசபாண்டியன், 2008, மொழிபெயர்ப்பியல், உயிர் எழுத்துப் பதிப்பகம், சென்னை.
4. முருகையன். இ., 2002, மொழிபெயர்ப்பு நுட்பம் ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
5. சந்திரன், வீ., மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், ராஜகுமாரி பப்ளிகேஷன், சென்னை, 2000.
6. சந்திரன், வீ., மொழிபெயர்ப்பியல் கொள்கைகள், பாரிநிலையம், சென்னை, 2000.
7. சாகுல் ஹமீது, தமிழில் கவிதை மொழிபெயர்ப்பு, நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை, 2009.


| | |
|---|---|
| **பாடநெறி அலகு** | **MAT 20403** |
| **பாடநெறித் தலைப்பு** | **தெரிவுசெய்யப்பட்ட நவீன இலக்கிய கர்த்தாக்கள்** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **150 மணித்தியாலங்கள்: (45 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 105 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**

ஒவ்வொரு இலக்கிய கர்த்தாவின் படைப்புக்களையும் இனங்கண்டு, படைப்பின் சமூக, அரசியல் பின்னணிகளை விளங்கிக்கொண்டு, தனிமனித ஆளுமைகளூடாக வெளிப்படும் இலக்கியம் பற்றிய கருத்தினை மதிப்பிட இப்பாடநெறி உதவும்.

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**

இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- ஒவ்வொரு படைப்பாளியினதும் ஆளுமை உருவாக்கப் பின்னணியினை வரையறுப்பர்.
- அவர்கள் எழுதத்தொடங்கிய, எழுதிய காலகட்ட சமூக, அரசியல் பின்னணிகளை விளக்குவர்.
- படைப்பாளிகளின் தளம், கருத்துநிலை, தத்துவச்சார்பு, நோக்குநிலை முதலானவற்றை வேறுபடுத்துவர்.
- இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்களைக் கற்று விளக்குவர்.
- அவர்களது படைப்புக்களது முக்கியத்துவத்தினை மதிப்பிடுவர்.
- இலக்கியப்படைப்புக்களின் உருவம், உள்ளடக்கம், உணர்த்தும்முறை என்பவற்றினை விமர்சிப்பர்.
- ஒரு இலக்கியப் படைப்பாளியின் தனித்துவத்தினை உறுதிப்படுத்துவர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

1. மாதவையா
2. புதுமைப்பித்தன்
3. பாரதி
4. பாரதிதாசன்
5. ஜெயகாந்தன்
6. மு. வரதராசன்
7. டானியல்
8. செங்கைஆழியான்

**கற்றல் கற்பித்தல் முறைகள்:**

விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்

**பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:**

1) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

| | | |
|---|---|---|
| கட்டுரை | 10% | 30% |
| குழுச்செயற்பாடு | 10% | |
| அளிக்கைசெய்தல் | 10% | |

| | |
|---|---|
| 2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள **எட்டு வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்** விடை எழுதப்பட வேண்டும். | 70% |

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**

1) ரகுநாதன், 1980, மூன்றாம் பதிப்பு, புதுமைப்பித்தன் வரலாறு, மீனாட்சி புத்தகநிலையம், சென்னை.
2) ரகுநாதன், 1986, இரண்டாம் பதிப்பு, பாரதி காலமும் கருத்தும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
3) ராஜ்கௌதமன், 1995, மாதவையா வாழ்வும் படைப்பும், காவ்யா,

பெங்களூர்.

4) மோகன். இரா., 1988, டாக்டர் மு. வ. வின் நாவல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5) திருநாவுக்கரசு. செ., 2004, டானியலின் எழுத்துக்கள், யாழ்ப்பாணம்.
6) முருகதாஸ். க., 2006, செங்கைஆழியானின் நாவல்கள், யாழ்ப்பாணம்.
7) கிருஷ்ணசாமி. ப., (தொகுப்பு), 1977, ஜெயகாந்தன் இலக்கியத்தடம், காவ்யா, சென்னை.
8) இரகுநாதன். ம., 2004, ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள், கொழும்பு.


| | |
|---|---|
| **பாடநெறி அலகு** | **MAT 20502** |
| **பாடநெறித் தலைப்பு** | **தமிழர் பண்பாட்டு வரலாறு** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **100 மணித்தியாலங்கள்: (30 மணித்தியால விரிவுரைகளும்/ கட்டுரை வகுப்புக்களும், 70 மணித்தியால சுயகற்கையும் இடம்பெறும். சுயகற்கை என்பதனுள் நூலகப் பயன்பாடு, கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்கேற்றல் முதலியன அடங்கும்.)** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**

பண்பாடு என்னும் கருத்துநிலையினை ஆய்வுநிலையிலும், தமிழர் பண்பாட்டின் வரலாற்றுவளர்ச்சியினைத் திறனாய்வு ரீதியிலும் நோக்கி, அதன் தனித் தன்மையினை இனங்கண்டு, வரலாறு, பொருளியல் இலக்கியம், நாட்டுப்புறம், மதம் என்பவற்றினூடாகத் தமிழர் பண்பாடு எவ்வகையிலான மாற்றங்களைப் பெற்றுள்ளது என்பதனைப் பகுப்பாய்வுசெய்து அதனை விளங்கிக்கொள்ளும் மனப்பாங்கினைப் பெறுவதற்கு இப்பாடநெறி வழிகாட்டும்.

**பாடநெறிக் கற்றல் பேறுகள்:**

இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- பண்பாடு என்னும் கருத்துநிலையின் பொருளை வரையறுப்பர்.
- மானிடவியல், இனவரைவியல் தொடர்பான ஆய்வுகளின் அடிப்படையில் தமிழர் பண்பாட்டு வளர்ச்சியினையும், அடையாளங்களையும் இனங்கண்டுகொள்வர்.
- தமிழர் பண்பாட்டின் வளர்ச்சியினையும், அதன் தனித்தன்மையினையும் இனங்கண்டுகொள்வர்.
- தமிழர் பண்பாட்டில் பல்வேறு மதங்களும் ஏற்படுத்திய தாக்கத்தினை விமர்சன ரீதியில் ஒப்பிடுவர்.
- பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யவேண்டியதன் அவசியத்தினை விமர்சிப்பர்.
- பழமையும், புதுமையும் கலக்கும்போது ஏற்பட்ட பண்பாட்டுச்

<table>
<tr><td colspan="3">சிக்கல்களை இனங்கண்டு வேறுபடுத்துவர்.<br>• மேற்கு நாட்டாரின் வருகையால் தமிழர் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தினை அனுமானித்து உதாரணத்துடன் பிரயோகிப்பர்.<br>• புலம்பெயர்வால் தமிழர் பண்பாட்டில் எவ்வாறான தாக்கம் ஏற்பட்டது என்பதை மதிப்பிடுவர்.</td></tr>
<tr><td colspan="3">பாடநெறியின் உள்ளடக்கம்:<br>1. பண்பாடு என்ற கருத்துநிலை தொடர்பான விளக்கம்.<br>2. பண்பாடு தொடர்பான கோட்பாடுகள்.<br>3. பண்பாட்டு படிமலர்ச்சி.<br>4. தமிழர் பண்பாட்டின் தனித்துவம்.<br>5. பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் தொடர்பான இனவரைவியல் பார்வைகள்.<br>6. தமிழர் சமுதாய வளர்ச்சி.<br>7. இனக்குழுநிலை, கூட்டுக்குடும்பம், குடும்பம், குலம், அரசு முதலியவற்றின் தோற்றமும் வளர்ச்சியும்.<br>8. தாய்வழிச் சமூகம், தந்தைவழிச் சமூகம்.<br>9. பண்பாட்டு விழுமியங்கள்.<br>10. நம்பிக்கைகள், சடங்குகள், புழங்குபொருட்கள்.<br>11. நாட்டார் வழக்காற்றியல் மரபுகள்.<br>12. இலக்கியமும் பண்பாடும்.<br>13. மேற்குநாட்டார் வருகையால் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள்.</td></tr>
<tr><td colspan="3">கற்றல் கற்பித்தல் முறைகள்:<br>விரிவுரைகள், கலந்துரையாடல்கள், முன்னிலைப்படுத்தல், குழுச்செயற்பாடுகள்</td></tr>
<tr><td colspan="3">பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:</td></tr>
<tr><td colspan="3">2) உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு</td></tr>
<tr><td>கட்டுரை</td><td>10%</td><td rowspan="3">30%</td></tr>
<tr><td>குழுச்செயற்பாடு</td><td>10%</td></tr>
<tr><td>அளிக்கைசெய்தல்</td><td>10%</td></tr>
<tr><td colspan="2">2) இறுதி அரையாண்டுப் பரீட்சை மதிப்பீடு (இரண்டு மணித்தியாலங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை) - கட்டுரை வினாக்களும், சிறுகுறிப்புக்களுமாக உள்ள ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதப்பட வேண்டும்.</td><td>70%</td></tr>
<tr><td colspan="3">பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:<br>1. வித்தியானந்தன், சு., (1971). தமிழர் சால்பு, பாரிபுத்தகப் பண்ணை, சென்னை.<br>2. பக்தவத்சலபாரதி, (1990). பண்பாட்டுமானிடவியல், மாணிவாசகர் பதிப்பகம், சென்னை.<br>3. ” , (2012), பாணர் இனவரைவியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.</td></tr>
</table>

4. ” , (2005), மானிடவியல் கோட்பாடுகள், வல்லினம் வெளியீடு, புதுச்சேரி.
5. வானமாமலை, நா., (1973). *தமிழர் பண்பாடும் தத்துவமும்,* சென்னை: நியூ செஞ்சரி புக் ஹவுஸ்.
6. இரகுநாதன்,ம., (2009). *தமிழர் பண்பாட்டுத் தடங்கள்,* யாழ்ப்பாணம்.
7. செல்வம், வே. தி., (2000). *தமிழகவரலாறும் பண்பாடும்,* சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
8. மாதையன், பெ., (2011), சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்பிளிக்கேசன், சென்னை.


| | |
|---|---|
| **பாடநெறிஅலகு** | **MAT 20506** |
| **பாடநெறித் தலைப்பு** | **ஆய்வறிக்கை** |
| **கற்கைக்கால அளவுப் பெறுமதி** | **06 அலகுகள்** |
| **ஒதுக்கப்பட்ட கால அளவு** | **600 மணித்தியாலங்கள்** |

**பாடநெறியின் நோக்கங்கள்:**

இப்பாடநெறியில் கற்றுக்கொண்டவற்றைப் பிரயோகிக்கும் வாய்ப்பை வழங்குவதற்கும், ஆய்வுப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைப் பகுப்பாய்வு செய்து உரிய முறையியலைப் பிரயோகித்து முடிவினைக் காண்பதற்கும், கண்டவற்றைக் கட்டுரையாக வடிவமைப்பதற்கும் இப்பாடநெறி உதவும்.

**பாடநெறி தொடர்பான விளக்கங்கள்:**

தமிழில் முதுமாணிக் கற்கையினைப் பூர்த்திசெய்பவர்கள் அதன் இரண்டாம் அரையாண்டில் ஆய்வறிக்கை ஒன்றினை பரீட்சைத் தேவையின் ஒரு பகுதியாக மேற்கொள்ள வேண்டும். ஆய்வுக்கான தலைப்பு தமிழ்ப் பாடநெறியுடன் இணைந்ததாக இருப்பதுடன், தலைப்பை மாணவர்களே தமது சுய விருப்பத்தின் அடிப்படையில் தெரிவுசெய்ய வேண்டும். பாட இணைப்பாளரினால் நியமிக்கப்படும் மேற்பார்வையாளரின் வழிகாட்டுதலுடன் மாணவர்கள் சுயமாக ஆய்வினை மேற்கொள்ள வேண்டும்.

ஆய்வுத்தலைப்பினைத் தெரிவுசெய்த பின்னர் மேற்பார்வையாளரின் வழிகாட்டுதலுடன் ஆய்வு முன்மொழிவு ஒன்றினை அளிக்கை செய்தல் வேண்டும். இவ்வாறே ஆய்வு நிறைவடைந்ததும் ஆய்வு தொடர்பான முழுமையான அளிக்கையினைச் செய்தல் வேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகள்:**

இப்பாடநெறியின் நிறைவில் மாணவர்கள்,

- ஆய்வுக்கான பிரச்சினையை இனங்காண்பர்.
- ஆய்வுமுறையியலில் கற்றவற்றைப் பிரயோகிப்பர்.
- ஏற்கெனவே நடைபெற்ற ஆய்வுகளிலிருந்து தாம் செய்யவேண்டிய ஆய்வின் இடைவெளியை இனங்காண்பர்.
- பிரச்சினைகளுக்கான தீர்வினை அடையாளங்காண்பர்.

| | |
|---|---|
| • சுயமான தேடலினை மேற்கொண்டு விமர்சிப்பர்.<br>• கட்டுரை எழுதுவதற்கான பயிற்சியினைப் பெறுவர்.<br>• ஆய்வுப்பிரச்சினையை முன்னிலைப்படுத்தி விவாதிக்கக் கற்றுக்கொள்வர். | |
| **கற்றல் கற்பித்தல் முறைகள்:**<br>கலந்துரையாடல், சுயதேடல், நூலகவாசிப்பு, நேர்காணல், களஆய்வு | |
| **பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்:** | |
| ஆய்வு முன்மொழிவு அளிக்கை | 15% |
| வரவு, கலந்துரையாடல் | 10% |
| ஆய்வேடு மதிப்பீடு | 60% |
| வாய்மொழிப் பரீட்சை | 15% |
| **மொத்தம்** | **100%** |